**இலங்கை புகையிரத சேவை**

**இலங்கை புகையிரத திணைக்களத்துக்குரிய குருவிட்ட புகையிரத நிலையத்தில் வர்த்தக கட்டிடம் மற்றும் வாகன தரிப்பிடத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான பெறுகைக் குழு விலைமனுக் கோரல்**

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் குருவிட்ட புகையிரத நிலையத்தில் வர்த்தக கட்டிடம் மற்றும் வாகன தரிப்பிடத்தினை ஐந்து வருட காலத்திற்கு வியாபார நடவடிக்கைக்காக குத்தகைக்கு வழங்குவது தொடர்பில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட பெறுகை விலைமனுக்கள் கோரப்படுகின்றன .

| விபரம் | அளவு (பர்சஸ்) |
|---|---|
| கட்டிட இலக்கம் II | 10 |
| கட்டிட இலக்கம் III | 4.9 |
| வண்டி தரிப்பிடம்(து.இ.1,2,3,4,9) | 55.3 |

01. தகைமைகள்

இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

கட்டிட பகுதிகளை கோருகையில் குறித்த துறையுடன் சம்பந்தப்பட்ட செல்லுபடியாகும் வியாபார பதிவு மற்றும் நிதி உறுதிப்பாட்டினை உறுதி செய்யவதற்காக 03 மாதங்களுக்கான வங்கி கூற்றறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**02. கேள்வி விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளல்.**

பெறுகை ஆவணங்களை 2026 ஆம் ஆண்டு 05 மாதம் 11 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைபடுத்தல் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். அதற்காக கொழும்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி உத்தியோகத்தரிடம் மீளளிக்கப்படாத கேள்விபடிவக் கட்டணமாக ரூ.2,500/- தொகையைச் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரதி அத்தியட்சகரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொவ்வொரு கட்டிடங்கள் மற்றும் வாகன தரிப்பிடம் தொடர்பில் தனித்தனியாக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன் கேள்வி படிவக் கட்டணத்திற்கு மேலதிகமாக அவ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் கேள்வி பிணையொன்றும் செலுத்தப்பட வேண்டும். அக்கேள்வி பிணைத் தொகையினை புகையிரத தலைமையகத்தின் பிரதான நிதி உத்தியோகத்தருக்கு இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பணத்தில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுசீட்டை (முதல் பிரதியை) கேள்வி மனுவோடு சமர்ப்பிக்க வேண்டும். ஒரு விலைமனு கோரலின் மூலம் ஒரு உருப்படிக்கு மாத்திரமே விலை கோர முடியும்.

03. கேள்விய விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் .

மேற்படி 02ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு பெறப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்திசெய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல்மூலையில், "........................................... குருவிட்ட புகையிரத நிலையத்தில் வர்த்தக கட்டிடங்கள் மற்றும் வாகன தரிப்பிடம் தொடர்பிலான விலைமனுக்கோரல்" என்று குறிப்பிட்டு அவ்வுறையை முத்திரையிட்டு 2026 ஆம் ஆண்டு 05 மாதம் 12 ஆம் திகதி பி.ப1.00 முன்னதாக கிடைக்கக் கூடியதாக தலைவர் , திணைக்கள பெறுகைக்குழு , விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம் , புகையிரத தலைமையகம் ஓல்கோர்ட் மாவத்தை , கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் பிரதி அத்தியட்சகர் (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்) இன் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியிலோ உள்ளிடலாம். அந்நேரத்தின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலினால் தாமதமானவை அல்லது தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

04. **கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்.**

2026 ஆம் ஆண்டு 05 மாதம் 12 ஆம் திகதி பி.ப 1.00 க்கு மேற்படி 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரியோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியோ சமூகமளிக்க அனுமதிக்கப்படும்.

05. கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்படி கட்டிடங்கள் மற்றும் வாகன தரிப்பிடத்தினை பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன் அதற்காக பிரதி பொதுமுகாமையாளர் (வணிகம்) ஊடாக அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

06. இலங்கை புகையிரத சேவையில் உள்ள ஊழியர்களுக்கு மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களுக்கு விண்ணப்பங்களை முன்வைப்பதற்கான உரிமை இல்லை.

07. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

08. விலைமனுதாரர்களுக்கு மேலதிக விபரங்கள் தேவையெனின் தொ.பே .இல - 011 2421281 (நீடிப்பு – 8235/ 011-4600944 ஊடாக இலங்கை புகையிரத சேவையின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு ,
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம்,
புகையிரத தலைமையகம், ஓல்கோர்ட் மாவத்தை , கொழும்பு 10